***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.42/2020 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | சேதுராமன் |
| */Father Name* | திரிஞானம் |
| *Village* | முக்குளம் தர்க்காஸ், |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *46* |

***1,2 எதிரிகள் ஆஜர்.***

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 24.04.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் என்னுடைய அண்ணனும், அவருடைய மனைவியும் ஆவார்கள்.

2. நான் கேரளாவில் வேலை செய்து கொண்டிருந்தேன். 2015 ஆம் ஆண்டு ஊருக்கு வந்தேன். கடந்த 21.07.2015 ஆம் தேதி மாலை 3.00 மணியிலிருந்து 5 மணி இருக்கும் நான் எங்களுடைய தென்னந்தோப்பிற்கு சென்றிருந்தபோது எனது அண்ணன் மனைவி லதா விளக்கமாறை எடுத்துக்கொண்டு என்னை அடிக்க வந்து ஏன் தென்னந்தோப்பிற்குள் வந்தாய் என்று சாண்டகுடிக்கு என்று மேலும் தகாத வார்த்தைகளால் என்னை திட்டினார்கள்.

3. என்னுடைய அண்ணன் இரும்பு பைப்பை எடுத்து எனது வலது காலில் கணுக்கால் முட்டியில் அடித்தார் அதில் எனது கணுக்கால் எலும்பு கிராக் ஆகிவிட்டது. என்னை தென்னந்தோப்பிற்குள் வரக்கூடாது என்றும் , மீறி வந்தால் வெட்டி விடுவேன் என்று எனது அண்ணன் மிரட்டினார். அந்த வழியாக வந்த பாலமுருகன் என்பவர் எனது அண்ணனை தடுத்து நிறுத்தினார். அங்கிருந்த தயாள் ராமன் என்பவர் என்னை மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள்.

4. மேலும் தென்னந்தோப்பில் எனது அம்மா மற்றும் இரண்டு சகோதரிகளான இளவரசி மற்றும் இந்திராகாந்தி ஆகியோர் இருந்தனர்.

எனது அம்மா தற்சமயம் இறந்து விட்டார். மருத்துவமனையில் இருக்கும்போலீசார் விசாரித்தார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். அது சம்பந்தமாக எந்த வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை.

5.பிறகு காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு மருத்துவர் டிஜார்ஜ் சம்மரியுடன் புகார் மனு அனுப்பினேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு என்னால் தபால் வழியில் காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்டதுதான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **மேற்படி புகார் மனு நகல் மற்றும் அதற்கான ஒப்புதல் அட்டை ( எண்ணிக்கை 2) அசாஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஒப்புதல் அட்டையுடன் நீதிமன்றத்திற்கு வந்து கு.வி.மு.ச 156(3)ன் கீழ் மனு செய்தேன். சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

ஒம்/–ஜெ.தமிழ்முருகன்,
நீதித்துறை நடுவர் எண்1,
மன்னார்குடி.